# அங்காளம்மன் வழிபாடு - சிதையிலிருந்து வளமை உருவாக்கம்

**முனைவர். மு. ஏழுமலை**
**உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**துவாரகதாஸ்கோவர்தன்தாஸ்வைணவக்கல்லூரி**
**அரும்பாக்கம், சென்னை.**
**elumalai.m81@gmail.com**

ஆய்வுச் சுருக்கம்

மக்களின் பண்பாடு குறித்த ஆய்வுகளில் செவ்விலக்கியங்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தைப்போன்றே நாட்டார் இலக்கியங்கள் சார்ந்த வழக்காறுகள், தெய்வங்களின் வழிபாட்டுமரபுகள், பழக்கவழக்கங்கள், நிகழ்த்துக்கலைகள் முதலானவையும் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிலையில்,தமிழக மக்களிடையே நாட்டார் தெய்வமாக உள்ள அங்காளம்மன் வழிபாட்டின்' மயானக்கொள்ளை' நிகழ்த்துதல் மக்களுக்கான ஒருவளமையின் குறியீடாதலைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

அங்காளம்மன் தெய்வவழிபாடு குறித்து ஆய்வுசெய்தவர்களில் அயல் நாட்டவரான எல்வின்மேயர், ஆ. வெங்கடேசன், அ.கா.பெருமாள், ஆறு. இராமநாதன், தொ. பரமசிவன், த. பழமலய் முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில், எல்வின்மேயர் அவர்கள் இத்தெய்வத்திற்கான புராணக்கதைகைளை சேகரித்து இத்தெய்வத்தின் தொன்மம் குறித்து ஆய்வுசெய்துள்ளார். ஆழி. வெங்கடேசன் அவர்கள் 'மயானக்கொள்ளை' என்னும் சடங்கு நிகழ்த்துதலை ஒரு அரங்கியல் நோக்கில் ஆய்வு செய்துள்ளார். மேலும், அங்காளம்மன் வழிபாட்டு முறைகளை விளக்க முறையில் சில பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் கட்டுரை அளவில் பதிவு செய்துள்ளனர். ஆனால் இவற்றைக் கடந்து ஒரு முன்னோர் வழிபாடாகவும், இவ்வழிபாட்டின் மூலம் பெறும் சிதையெனும் 'சாம்பல்' வளமைக்கான குறியீடாகவும் உள்ளதை ஆய்வின் மூலம்கண்டறிய வேண்டியுள்ளது.

அங்காளம்மன் வழிபாடு ஒரு வளமைக்கான குறியீடு என்னும் கருதுகோளோடு, தமிழகத்தில் அரக்கோணம் நகருக்கு அருகிலுள்ள கூடலூர், வேலூர் மாவட்டம் ஆற்காடு, கலவை, காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டம் அனுமந்தை, பெருமுக்கல், ஒலக்கூர்,

மேல்மலையனூர்,சென்னையில் திருல்லிக்கேணி, சூளை, ஐஸ்ஹவுஸ், அரும்பாக்கம், ராயபுரம் -கல்மண்டபம் ஆகிய இடங்களில் கட்டுரையாளரால்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**அங்காளம்மன்வழிபாடு**

நாட்டார் தெய்வங்களைப் பொறுத்தவரையில், மக்களுக்கான தேவைகளின் அடிப்படையில் மக்களால் உருவாக்கப்படும் தெய்வங்களாகும். ஒவ்வொரு தெய்வமும் மக்களின் ஒரு குறிப்பிட்ட தேவையை நிறைவேற்றக் கூடியதாக அமையும். இத்தகைய தெய்வங்களின் உருவாக்க நிலையைக்குறித்து தொ.பரமசிவன் குறிப்பிடும்பொழுது, **“ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகத் தேவைகள் மாறமாற, தெய்வங்களும் அவற்றின் பண்புகளும்மாறின” (ப.120:2010)** என்றுகுறிப்பிடுகிறார். இத்தகைய அடிப்படையான புரிதலால், அங்காளம்மன் தெய்வவழிபாட்டின் முறைமைகளை: வழிபாடு நிகழ்த்தப்படும் காலம், சூழல், வெளி, தெய்வத்திற்கு இடப்படும்படையல், வழிபாட்டில் செய்யப்படும் உயிர்பலி, வழிபாட்டில்பங்கேற்கும் பெரும்பாலானமக்கள் முதலான வழிபாட்டிற் குரியகூறுகளை ஆராயும்பொழுது இவ்வழிபாடு மேற்கொள்ளுதலின் நோக்கத்தை அறிந்துகொள்ளலாம்.

**விழாநடைபெறும்காலம், சூழல், வெளி**

அங்காளம்மன் வழிபாடு அனைத்து நாட்டார் தெய்வங்களைப் போன்றே ஆண்டு முழுவதும் விழாக் கொண்டாடுதலின்றி மாசிமாத அமாவாசை நாளில் விழாக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக, ‘மயானக்கொள்ளை” என்னும் சடங்கு அங்காளம்மன் வழிபாட்டின்மையமாகவும் மக்களின் தேவையை நிறைவேற்றுவதாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது. பரதவர், வண்ணார், ஆதிதிராவிடர், அருந்ததியர் முதலான இனத்தினர் தங்களுக்கான தெய்வமாகவும், குலதெய்வமாகவும் கருதி வழிபடுகின்றனர். இதற்கான புராணக்கதைகள் இம்மக்களிடம் வழங்கி வருகிறது. ஆனால், இன்றைய சூழலில் தமிழகத்தில் பரவலான பகுதிகளில் அனைத்து இனத்தினராலும் வழிபடும் தெய்வமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

அங்காளம்மன் வழிபாடு என்பது ஒரு நாட்டார் தெய்வத்திற்கான வழிபாட்டுக் கூறுகளை பெரும்பாலும் பெற்றும், இத்தெய்வத்திற்கென்றே வழங்கும் சிறப்புக் கூறுகள் சிலவற்றைக் கொண்டும் நிகழ்த்தப்படுகிறது. இவ்வாறு ஒரு தெய்வத்தின் வழிபாட்டில் அத்தெய்வத்திற்கான சிறப்பு வழிபாட்டுக் கூறுகள், மக்களின் தேவைகளை அத்தெய்வத்திடம் முன்னிறுத்துவதாகவும், தேவைகளைப்பெற்று மனநிறைவுறுதலின் செயல்பாட்டு வடிவமாகவும் அமைகிறது.

அங்காளம்மன் வழிபாடு மூன்று நாள்கள் முதல் பத்து நாள்கள் வரை நடைபெறுகிறது. இவ்வழிபாட்டின் பொதுக் கூறுகளாக: கொடியேற்றுதல் முதல் நிகழ்வாகவும், இந்நிகழ்வைத் தொடர்ந்து நீர்திரட்டுதல் சடங்கு (காப்புக்கட்டுதல்) நடைபெறும் .இச்சடங்கு, ஊரின்புறத்தே உள்ள நீர்நிலையில் கரகம் செய்துபம்பை, உடுக்கை, சலங்கை ஆகிய இசைக் கருவிகளைக் கொண்டு அங்காளம்மனை வருணனைச்

செய்து, மஞ்சள்கிழங்கை நூலில்கட்டி இச்சடங்கில் பங்குபெறும் தர்மகர்த்தா உள்ளிட்ட மக்கள்கையில் கட்டிக்கொள்வர். இச்சடங்கு காப்புக்கட்டுதல் என்பதாகும். இதைத்தொடர்ந்து, அடுத்தடுத்த நிகழ்வாக ஒவ்வொரு நாளும் அன்னவாகனம், யானைவாகனம், சிங்கவாகனம், மயில்வாகனம், என அம்மன்வீதியுலா வருதல், மஞ்சள்நீர் ஊற்றுதல், அம்மனின் உதரவாய் (இரத்தவாய்) துடைத்து குளிர்ச்சியடையச் செய்தல் என தொடர்ச்சியாக சடங்குகள் நடைபெறும். இவை ஒரு நாட்டார் தெய்வ பொது வழிபாட்டுக் கூறுகளாகும்.

**மயானக்கொள்ளைச்சடங்கு**

அங்காளம்மன் வழிபாட்டின் முதல் சடங்கான காப்புக்கட்டு தலைத்தொடர்ந்து, இரண்டாம் நாள் சடங்காக மாசி அமாவாசை நாளில் நடைபெறும் “மயானக்கொள்ளைச்” சடங்குதான் இவ்வழிபாட்டின்மையச் சடங்காகும். மக்கள் இத்தெய்வத்தின் உருவாக்க நோக்கத்தினை இச்சடங்கின் மூலம்தான் முன்வைத்தலும் நிறைவேறலும் செயல்படுகிறது எனலாம்.

மயானக்கொள்ளைச் சடங்கில் அங்காளம்மன் சுடுகாட்டிற்குச் செல்லல் என்பது முக்கிய நிகழ்வாகும். மயானக்கொள்ளைச் சடங்கு நடைபெறும்களம் என்பது சுடுகாடு ஆகும். இச்சடங்கு நடைபெறும் நாளில் கோயிலின் முன்பு பந்தலிட்டு, விழா கொண்டாடப்படும் ஊரின் எல்லை சார்ந்து விளையும் விளைபொருள்களால் அலங்கரிக்கப்படும். இவ்வாறு அலங்கரிக்கப்படும் பொருள்களில் மா, பலா, வாழை, தேங்காய், பனங்காய், கம்பு, காய்கறிகள் முதலானவை இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. பிறகு, கோயில் பூசாரி காப்புக்கட்டிய ஊர்மக்களோடு சென்று நீர்நிலையிலிருந்து நீரைக் கொண்டுவந்து அங்காளம்மனுக்கு பூசை செய்வார். அங்காளம்மனை பூக்கள், பல வகை தானியங்கள், பலவகை காய்கறிகள் ஆகியவற்றைக் கொண்டு மக்கள் அலங்காரம் செய்வார்கள். இவ்வாறு அலங்காரம் செய்யப்பட்ட அங்காளம்மனை தெய்வ உருவம் மாலைப்பொழுதில் ஊர்வலம் வரும்.

அங்காளம்மன் ஊர்வலம் தொடங்குவதற்கு முன்பாகப் பலியிடப்பட்ட ஆட்டின் ஈரல், குடல் முதலான உறுப்புகளை மக்கள் காளி, காட்டேரி முதலான வேடங்களை யேற்று வாயில் கவ்விக் கொண்டும், உடல்களில் சுற்றிக் கொண்டும் ஊர்வலத்தில் பங்கேற்பர். ஆட்டின் இரத்தத்தை சோற்றில் இட்டு ஊர் எல்லைகளில் வீசியும், நோயுற்றவர்கள், குழந்தையில்லாதவர்கள் முதலானவர்களுக்கு வழங்கியும், ஊர்வலம் நடைபெறும். அன்றே அம்மனுக்கு கூழ்வார்த்தல், பொங்கலிடுதல் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. அம்மன் ஊர்வலம் முடிவடைந்ததும் இறுதியாக மயானத்தை அதாவது சுடுகாட்டை அலங்கரிங்கப்பட்ட அம்மன் உருவம் அடையும்.

மயானத்தில் இறந்தவர்களை எரித்த சாம்பலைக் கொண்டு (கலவை, மேல்மலையனூர்) அல்லது மண் கொண்டு (பிறஇடங்களில்) ஒரு பெண் உருவம் அமைக்கப்படும். இந்த உருவம் மஞ்சள், குங்குமம், பூக்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். தேரில் உலாவரும் அம்மன் மயானத்தை அடைந்ததும் உழவர்கள் தங்களின் நிலங்களில் விளைந்த காய்கறிகள், கீரைவகைகள், அரிசிமாவினால் செய்யப்பட்ட கொழுகட்டைகள் முதலானவற்றை அம்மன் மீது சூறையிடுகின்றனர்

(வீசிஎறிவர்). இவற்றை **“மயானசூறை அல்லதுமயானக் கொள்ளை”** என்கின்றனர். இச்சடங்கு குறித்துதொ. பரமசிவன், **‘சிறுதெய்வக் கோவில்களில் திருவிழாக்கள், பெரும்பாலும் மாசி மாதத்தில் மகா சிவராத்திரியன்று நடைபெறும். இத்திருவிழாவினை ‘மாசிக்களரி’[2] (ப.128;2010) என்பர்’** என்றுகுறிப்பிடுகிறார்.

இச்சடங்குதான் அங்காளம்மன் வழிபாட்டு நிகழ்வின் முக்கியச் சடங்காகும். சூறையிடுதலில் கிடைக்கின்ற பொருள்களுக்கு பெரும்மதிப்புண்டு. சூறையிடு தலைத்தொடர்ந்து, சாம்பலில் செய்யப்பட்ட அம்மன் உருவத்திற்கு ஆடு, கோழி, பன்றிபலியிடப்படும். பிறகு, இச்சடங்கில் கட்டேரி வேட மணிந்து வந்தவர்களும், தீச்சட்டி எடுத்தல், அலகுகுத்தல், அலகிட்டு அம்மனுக்கு மாலையிடுதல், அம்மனுக்குத் தேர் இழுத்தல், அலகிட்டுகல் உருளை இழுத்தல் முதலான சடங்குகளை மேற்கொண்டவர்களும், பொதுமக்களும் குறிப்பாக உழவுத் தொழில் செய்யக்கூடியவர்கள், நோயுற்றவர்கள், குழந்தையில்லாதவர்கள் முதலானோர் ஒரு வரையொருவர் முந்திக்கொண்டு அம்மன் உருவத்தின் சம்பாலை அல்லது மண்ணை வீட்டிற்குக் கொண்டுசெல்வர். இதோடு விழா நிறைவடையும். இவை அங்காளம்மன் வழிபாட்டின் சிறப்புக்கூறுகளாகும். இத்தகைய கூறுகள் தமிழகத்தின் பல பகுதிசார்ந்து சிறு சிறு வேறுபாடுகளோடு விழா நடைபெறுதலும் குறிப்பிடத்தக்கதாகும்.

**மயானக்கொள்ளைச்சடங்குவளமைக்கானகுறியீடாதல்**

இவ்விழாவில் நிகழும் சடங்குகளின் படி நிலைகளையும், விழா வின்மையச் சடங்கையும் (காய்கறிகளால் அலங்கரிக்கப்பட்ட அங்காளம்மன் சிலை ஊர்வலம்), சாம்பல் அல்லது மண்சிலை அமைப்பையும் குறித்து ஆராய்வது இன்றியமையாதது. அவ்வகையில், மயானத்தில் அம்மன் உருவம் அமைக்க உதவும் சாம்பலுக்கு முதன்மையான மதிப்பு உண்டு. விழா தொடங்கிய நாளில் எல்லை சார்ந்து ஒருவர் இறப்பது ஒரு பெரும்பேறாகக் கருதப்படுகிறது. ஏனெனில், விழாநாளில் இறப்பவரின் பிணம் சுடுகாட்டிற்கு வரவழைக்கப்பட்டு, பிணத்தை எரிப்பதற்கான எல்லாச் செலவுகளையும் அங்காளம்மன் கோயில் நிர்வாகமே ஏற்கும் (கலவை, மேல்மலையனூர்). இத்துடன் விழாவின் இறுதியில் மயானத்தில் உருவாக்கப்படும் உருவச்சிலை, இறந்தவரின் சாம்பலைக் கொண்டுதான் செய்யப்படும். இச்சாம்பல் எல்லா வளமையும் அளிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. இந்நம்பிக்கையினால் தான் மயானத்தில் அம்மனுக்கான சூறையிடல் நிகழ்வு முடிவடைந்தவுடன் மக்கள் தெய்வ உருவச் சாம்பலை எடுப்பதில் மக்கள் ஆர்வம் கொள்கின்றனர். ஒரு பிடிச்சாம்பலையாவது தங்களுடைய வீட்டிற்குக் கொண்டு செல்லவேண்டும் என்று நினைக்கின்றனர். இந்த சாம்பல் கொண்டு செல்லும் வழக்கம் விழா நடைபெறும் எல்லை சார்ந்த மக்களிடம் மட்டுமில்லாமல், சாம்பலை கொண்டு செல்வதற்காக மட்டுமே பல ஊர்களிலிருந்தும், ஆந்திரம், கர்நாடகம் முதலான மாநிலங்களிலிருந்தும் (கலவைக்கு) மக்கள் வருகின்ற வழக்கம் உள்ளது.

கலவை கிராமத்தில் நடைபெற்றமயானக் கொள்ளைச் சடங்கில் கட்டுரையாளர் அங்கு வந்திருந்த மக்களிடம் உரையாடியபொழுது, சிலர் ஆந்திர மாநிலத்திலிருந்து மயானக் கொள்ளைச் சடங்கின் சாம்பலைக் கொண்டுச் சென்றுதங்கள் நிலத்தில்

இடுதலுக்காக வந்திருந்ததை காண முடிந்தது. இங்கு சாம்பல் என்பது ஒரு வளமைக் குறியீட்டுப் பொருளாகச் செயல்படுகிறது. இக்குறியீட்டுப் பொருள் மனித உடலின் அழிவிலிருந்து உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

மேல் மலையனூர் மயானக் கொள்ளைச் சடங்கைக் குறித்துத. பழமலய் குறிப்பிடும் பொழுது,

> **“மலையனூரில் பிணங்களை எரிப்பதும் அரிசி மாவினால் ஆன குழந்தை உருவங்களைச் சிதறவிடுவதும் நரபலிக்கு மாற்று ஏற்பாடு ஆகிறது”[3](ப.188;2002)**

என்றும், இச்சடங்கை தமிழக வரலாற்றின் நரபலி முறையின் தொடர்ச்சியானது என்றும் குறிப்பிடுகிறார். இதைப் போல வேமயானக் கொள்ளைச் சடங்கில் பயன்படுத்தப்படும் பிணத்தை எரித்த சாம்பலின் மதிப்பீட்டைப் பதிவு செய்யும் பொழுது,

> **“எரிந்தவரின் நீற்றையும் நீற்று அடிமண்ணையும் முந்திக் கொண்டு எடுத்துச் செல்லும் சிற்றூர்மக்கள், அவற்றை விளைச்சல் பெருக்கத்திற்காக தங்கள் நிலத்தில் இடுகிறார்கள். இதனைப்பயிரில் இட்டால் நோய்கள் நீங்கும் என்றும், இதனை மக்கள் நெற்றியில் இட்டுக் கொண்டால் நலம்பெறுவார்கள் என்றும், சாம்பல் இருக்கும் மனையைக் காற்றும் கருப்பும் அரவும் நெருங்காது என்றும் நம்பிக்கை கொண்டார்கள்”[4](ப.86;2002)**

இதன்மூலம் அங்காளம்மன் வழிபாட்டின் நோக்கமும், மயானக் கொள்ளைச் சாம்பலின் வளமைக் குறியீட்டு உருவாக்கத்தையும் உணர்ந்துகொள்ளலாம்.

அங்காளம்மன் விழாவின் மேற் கண்ட நிகழ்வுகளில் அம்மனுக்கு காய்கறிகளைக் கொண்டு அலங்காரம் செய்தல், மயானத்தில் உழவுத் தொழில் செய்யக் கூடியமக்கள் தங்களின் நிலங்களில் விளைந்த காய்கறிகளை சூறையிடல், விழாவில் பெரும்பாலான பெண்களும், வேளாண்மைத் தொழில் செய்யக் கூடியவர்களும் பங்கேற்றல், மாநிலம் கடந்தும் மக்கள் வந்து மயானத்தின் சாம்பலைக் கொண்டுச் சென்றுதங்களின் விளைநிலங்களில் இடுதல், மயானத்தில் கிடைக்கப்பெறும் காய்கறிகள் விதைகளாகவும், நோய்களை நீக்கும் பொருள்காளவும், இரத்தச்சோறும், அரிசி மாவினால் செய்யப்பட்ட கொழுக்கட்டையும் குழந்தைப்பேற்றை உருவாக்குவதாகவும் உள்ள நம்பிக்கைகள் ஒரு வளமைக் குறியீடாக சிதையென்னும்‘ **மனிதச்சாம்பல்**’ உள்ளதை உணர்த்துகிறது. இவை தொல் பழங்கால மனிதர்களிடத்திலே வழங்கிய மூத்தோர் வழிபாட்டின் எச்சமாகவும் காணலாம். இன்றும் இறந்த முன்னோர்களின் சாம்பலை ஒரு சிறிய மண்பானையில் இட்டு வைத்து வணங்கும் வழக்கம் உண்டு.

**பிறதெய்வவழிபாடுகளும்வளமைக்குறியீடும்**

அங்காளம்மன் வழிபாட்டில் சுடுகாட்டில் சாம்பல் அல்லது மண்ணால் செய்யப்பட்ட உருவங்கள் சிதைக்கப்பட்டு அவைவளமைக்கான குறியீட்டுப் பொருளாக மக்கள் கொண்டு செல்வதைப் போலவே, தமிழகத்தில் உள்ள பிற தெய்வங்களின் வழிபாட்டிலும் இவ்வழக்கம் உண்டு.

திரௌபதியம்மன் வழிபாட்டில் அரவான்கள பலி, துரியோதனன் படுகளம் ஆகிய சடங்கிலும் அரவான், துரியோதனன் உருவச்சிலைகள் அமைப்பதும், சடங்கு நிகழ்த்துதலின்

இறுதியில் அச்சிலைகள் சிதைக்கப்பட்டு **'மண்'** வளமைக் குறியீடாக மக்கள் கொண்டு செல்லும் வழக்கம் வட தமிழகத்தில் பரவலாக உண்டு (ப.151;2011).[5]

கோவை உள்ளிட்ட கொங்கு மண்டலப் பகுதியில் நடைபெறும் பெரியாண்டச்சி அம்மனுக்கு மாசி மாதத்தின் அமாவாசை நாளில் நடைபெறும் விழா 'மயானப் பண்டிகை' என்பதாகும். இவ்வழிபாட்டு விழா வட தமிழகத்தில் நடைபெறும அங்காளம்மன் வழிபாட்டை பெரும்பாலும் ஒத்திருக்கும். குட்டிக் கடித்தல் என்னும் சடங்கின் மூலமாக பெறப்படும் ஆட்டின் இரத்தம் பொங்கல் சோற்றுடன் கலந்து அதனை அம்மனுக்கு படையலிட்டு குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்குக் கொடுப்பர் (வை.கதிரேசன்,ப.67,2008).[6]இங்கு **'இரத்தச்சோறு'** என்பது வளமைக் குறியீட்டுப் பொருளாக உள்ளதைக் காணலாம்.

கேரளத்தில் வண்ணப் பொடிகளால் தெய்வ உருவங்களை வரைந்தும் (களம்எழுதுதல்), மார்புப் பகுதியில் நெல்லையும் அரிசியையும் வைத்து அலங்கரித்தும் வணங்கும் வழக்கம் உண்டு. இதற்கு'களம் எழுதுதல்' என்று பெயர். வழிபாடு முடிந்த பின்பு தெய்வ உருவத்தை அழித்துவிடுவர். இதற்கு 'களம்அழித்தல்' என்று பெயர். தெய்வத்தின் உருவம் அழிக்கப்பட்டவுடன் மார்புப்பகுதியில் உள்ள நெல்லையும் அரிசியையும் விழாவில் கலந்து கொண்ட மக்களுக்கு பிரசாதமாக அளிப்பர். இப்பிரசாதத்தை 'திருமுலைப்பிரசாதம்' என்பர் (தொ.பரமசிவன், ப.52;2017)[7] இங்கு **நெல்**, **அரிசி** ஆகியப் பொருள்கள் வளமைக் குறியீட்டுப் பொருள்களாகின்றன.

நாகர்கோவில் பகுதியில் பரதவர்கள் கொண்டாடப்படும் காமன் வழிபாட்டில் சிவனின் கோபத்தால் காமன் எரியூட்டப்படும் சடங்கு கடல் பகுதியில் நிகழும். காமன் உருவ பொம்மையை எரிக்கப்படும் பொழுது, அப்பொம்மையின் சாம்பல் வளமைக் குறிய பொருளாகிறது. இங்கு **'சாம்பல்'** என்பது ஒரு வளமைக் குறியீட்டுப் பொருளாகிறது (தகவலாளர்கனிமொழி, திருச்சி, வயது 32)[8].

முடிவுரை

இவ்வாறு வட தமிழகத்தில்நடைபெறும் அங்காளம்மன் வழிபாட்டில் உள்ள சிதையென்னும் 'சாம்பல்' ஒரு வளமையின் குறியீடாக இருப்பதைப் போல தமிழகத்தில் உள்ள பிற தெய்வ வழிபாட்டு நிகழ்வுகளிலும் வெவ்வேறு பொருள்கள் வளமைக் குறியீட்டுப் பொருள்களாக உள்ளதை அறிந்து கொள்ளலாம். இச்சடங்கு முறைகள் மனித உடலின் அழிவிலிந்து வளமை உருவாக்கிக் கொள்ளும் மூதாதையர் வழிபாட்டின் நீட்சியாகவும், வேளாண் தொழில் சார் மக்களின் வளமைக்கான சடங்காகவும் இருப்பதைக் காணலாம்.

**துணைநூல்பட்டியல்**


1. **தொ. பரமசிவன், பண்பாட்டுஅசைவுகள், காலச்சுவடுபதிப்பகம், நாகர்கோவில்,ஆறாம்பதிப்பு 2010.**
2. **த. பழமலய், நரபலி: தெய்வங்கள், திருவிழாக்கள், தன்னனானேபதிப்பகம், சென்னை, 2002.**
3. **இரா. சீனிவாசன்(பதிப்பாசிரியர்), தமிழகத்தில்பாரதம்: வரலாறு- கதையாடல், மாற்றுவரிசைவெளியீடு, சென்னை, 2011.**
4. **சி.மா. இரவிச்சந்திரன் (முதன்மைப்பதிப்பாசிரியர்), கொங்குநாட்டுப்புறவியல், தமிழ்த்துறை, பாரதியார்பல்கலைக்கழகம், 2008.**
5. **தொ. பரமசிவன், விடுபூக்கள், காலச்சுவடுபதிப்பகம், சென்னை, நான்காம்பதிப்பு** 2018.